1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1975) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/1975).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 38/1961) 1961 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. அது மூன்றுண்டுக் காலத்திற்குச் செயலில் இருந்தது. பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் வாயிலாக அவ்வப்போது இச்சட்டத்தின் செல் திறன் நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 1/1971) மேற்படி சட்டத்தின்

@ 277-278 ஆம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

[திரு .அ .பெ. தர்மலிங்கம்] [1975 ஏப்ரல் 19

செல்திறன் கால அளவு மூன்றுண்டுக் காலத்திற்குக் கடைசியாக நீட்டிக் கப்பட்டது. மேற்சொன்ன மூன்றுண்டுக் கால அளவு 1973 நவம்பர் 28 ஆம் நாளன்று முடிவடைந்தது.

குடியிருப்பு ஒன்றை அனுபோகத்தில் வைத்துள்ள ஒருவர் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதைத் தவிர மற்றபடி, அத்தகைய குடியிருப்பி லிருந்து 1961 ஆம் ஆண்டு 38-வது சட்டத்தின் கீழ் வெளியேற்றப்படுவதி னின்றும் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய குடி யிருப்பு குறித்த 1971 ஜூன் 19 ஆம் நாளன்று குத்தகைக்காரராக அல்லது உரிமைதாரராக இருந்த உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் ஒருவருக்கு தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடமை உரிமை வழங்கல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1971) உடைமை உரிமை வழங்குகின்றது. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு 38 வது சட்டம் 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் தேதிக்குப் பின்னரும் செல்திறன் பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டாலொழிய, 1971, ஜூன் 19-ஆம் நாளுக்குப் பிறகு குடியிருப்பு ஒன்றை அனுபோகத்தில் வைத்துள்ள உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும், தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு 40 வது சட்டம் நீட்டிக்கப்படாத பகுதிகளில் உள்ள குடியிருப்பு அனுபோகதாரர்களும், அத்தகைய குடியிருப்பிலிருந்து வெளி யேற்றப்படுவதற்கு எதிராகப் பாதுகாப்புப் பெற மாட்டார்கள். எனவே, தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளி யேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) சட்டத்தை 1973 ஆம் ஆண்டு நவம் பர் மாதம் 29 ஆம் நாளிலிருந்தே செயல்படும் வகையில் அதை நிலையான சட்டமாக மீண்டும் இயற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க இச்சட்ட முன் வடிவு விழைகிறது.

இதை ஏற்குமாறு இம்மேலவையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. எ. பாலசுப்பிரமணியம்.

மாற்றுத் தலைவர் (திரு. எ. பாலசுப்பிரமணியம்): முன்மொழியப் பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இக்குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தைப் பொறுத்த மட்டில், இரண்டொரு கருத் துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 19] [திரு. ஜி. சுவாமிநாதன்]

இது விஷயத்தில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பலர் நீதி மன்றங்களுக்குச் சென்றிருக்கின்றார்கள். அவர்கள் அப்படிச் செல்லுவதற்கு முக்கிய காரணம், இப்படி குடியிருப்புதாரர்களாக இருப்பவர்கள், யார் அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் ஆவது என்பதைப் பற்றி மூலச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மூலச் சட்டத்தில் குடியிருப்பவர்கள், குத்தகைதாரர்களாகவோ அல்லது அவர்களே நில உடமையாளர்களாகவோ அல்லது அவர்களே நிலத்தைச் சாகுபடி செய்கின்றவர்களாகவோ இருந்தால், அவர்கள் குடியிருப்புதாரர்களாகக் கருதப் படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் உண்மையில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் உண்மையாகவே சாகுபடியாளர்களாகவோ குத்தகைதாரர்களாகவோ இருந்து, அவர்கள் குடியிருக்கும் பகுதிகளைச் சொந்தமாக ஆக்கிக் கொள்ளுகின்றார்கள். அப்படிச் செய்யும் போது, அதற்காக சொந்தக்காரர்களுக்கு "காம்பென்ஸேஷன்" மிகவும் குறைவான அளவில்தான் கொடுக்கப்படுகிறது. அதுவும் நியாயம் என்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் இதிலே பலர் குடியிருப்புதாரர்களாக இருப்பதால், குத்தகைதாரர்களாக இருக்காமல், குடியிருப்புதாரர்களாக இருந்து, நகரங்களுக்கு அருகாமையில் உள்ள சில பகுதிகளில் குடியிருப்புகள் அமைந்து விடுகின்றன. உதாரணமாக நன்னிலத்திற்குப் பக்கத்தில் இந்த மாதிரிப் பகுதிகள் இருக்கின்றன. குடந்தைக்குப் பக்கத்திலும் இப்படிச் சில பகுதிகள் இருக்கின்றன. அங்கே உண்மையாகவே வசதி படைத்தவர்களாக இருப்பவர்கள்கூட விற்பனை வரி கட்டுகின்றவர்கள், வருமானவரி கட்டுகின்றவர்கள், சென்னையில் இருந்துகொண்டிருப்பவர்கள்—இவர்களெல்லாம் இருக்கும் நிலைமை ஏற்படுகின்றது. அங்கே ஒரு குழி நிலம் 100 ரூபாய் என்ற அளவில் உள்ள நிலங்கள் கூட குடியிருப்புதாரர்களிடம் மாட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இதுபற்றி உயர் நீதி மன்றத்தில் "ரிட்" போட்டு, நீதி மன்றத்திலும் இந்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்று எடுத்துச் சொல்லி, அரசாங்கம் இதைத் திருத்துவதற்கு ஏதாவது செய்யுமா என்று கேட்டதாகவும் நான் அறிகிறேன். ஆகவே மூலச் சட்டத்திலுள்ள இந்தக் குறைபாடுகளை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: துணைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட தாக்கீதுகள் எதுவும் இங்கே வந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப்போல, சில இடங்களிலே இப்படிப்பட்ட தகராறுகள் இருக்கின்றன. ஒரு சில பகுதிகளிலே நிலச் சொந்தக்காரர்கள் சிலருக்கு இனாமாகக்கூட கொடுத்திருக்கின்றார்கள் என்றும் தெரிகிறது. ஆனால் ஒரு சில இடங்களிலே குடியில்லாதவர்களுக்கு எப்படி வழங்கப்பட்டிருக்கின்றது என்று கேட்டுத்தான் நீதி மன்றங்களுக்கு முன்னால் வந்திருக்கின்றது. நீதி மன்றத்திலிருந்து அப்படிப்பட்ட தீர்ப்பு வந்தால், இந்தச் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் தயங்காது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 ஏப்ரல் 19

எனவே இந்தச் சட்டவரைவை ஏற்றுக்கொண்டு, சட்டமாக நிறைவேற்றித் தரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஏ. பாலசுப்பிரமணியம்) : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு ஏ. பாலசுப்பிரமணியம்) : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.